பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸூ மாசி மீ 10 உ வெள்ளிக்கிழமை (22-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர்: 87

# நாடாளுமன்றில் அடிதடி, ரகளை!

## பாதுகாப்பு அமைச்சர் பார்த்திருக்க மக்கள் பிரதிநிதிகள் மல்லுக்கட்டினர்

கொழும்பு, பெப்ரவரி 22

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் நேற்று எம்.பிக்கள் இடையே அடிதடி, மோதல், குழப்பங்கள் ஏற்பட்டன.

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா பார்த்திருக்கையில் மக்கள் பிரதிநிதிகள் மல்லுக்கட்டினர்.

ஸ்ரீலங்காவின் நாடாளுமன்ற வரலாற்றிலேயே ஏற்பட்டிராத அளவு வன்செயல், ரகளையில் எம்.பிக்கள் நேற்று ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் ஆரிய செக்சாவ தலைமையில்-நிலச் சீர்திருத்தச் சட்ட திருத்த விவாதம் நடந்தபோதே இந்தக் கலவரம் இடம்பெற்றது.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் அரசின் முயற்சிக்கு அடையாள எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்குடன நவசமசமசமாஜக் கட்சித் தலைவரும் ஐக்கிய சோஷ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 15 எம்.பிக்கள் காயமுற்றனர்

கன்பரா, பெப்.22

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தாக்குதலில் பதினைந்துக்கும் அதிகமான எம். பிக்கள் காயமுற்றனர் என்று ஆஸ்திரேலிய வானொலி அறிவித்தது.

சபையில் கலவரம் நடந்தபோதும், நிலச்சீர்திருத்தச் சட்டம் நிறைவேறியதாக சபையின் தலைவர் அறிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகள் நாடாளுமன்ற கலவரம் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டன. ஆனால் அரச சார்பு தொலைத் தொடர்பு சாதனங்கள் மௌனம் சாதித்தன. [உ-3]

### முச்சந்தி முரளி



உலையளக்கும் அதிரடிப் பயிற்சி குடுத்திருக்கினம் போலை......!

## கதிரையில் இருந்து வாசுவை இழுத்து எடுத்து அடித்தனர்

நாடாளுமன்றத்தில் நடந்த கைகலப்பின்போது, சபாநாயகரின் ஆசனத்தில் பலவந்தமாக அமர்ந்திருந்த வாசுதேவ நாணயக்கார, அரசு தரப்பு எம்.பிக்களாலும், சில அமைச்சர்களாலும் ஆசனத்திலிருந்து இழுத்து எடுக்கப்பட்டு தாக்கப்பட்டார்.

அவரது சட்டை [சேர்ட்] கிழித்தெடுக்கப்பட்டது. வாசுவின் கைக்கடிகாரமும் உடைந்து நொருங்கியது.

## அமைச்சர்களும் தாக்கினர் வாசுவும் பதிலடி கொடுத்தார்

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சண்டைகளில் அமைச்சர்கள் சிலரும் ஈடுபட்டனர் என்றும், தம்மைக் காப்பாற்றிக் கொள்ள தாமும் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் திரு. வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

"இலங்கை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்செயல்தனைப் பார்க்கும் போது தமிழக சட்டசபை கூட தோற்றுவிட்டது" — என்றார் அவர்.

## கலவரத்தில் ஈடுபட்ட எம்.பிக்கள் தண்டிக்கப்படுவர்

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்செயல்களில் ஈடுபட்ட ஆளும் கட்சி எம்.பிக்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறினார்.

கலவரம் நடந்தபோது தாமும் சபையில் இருந்ததாகவும் அமைச்சர் விஜேரத்தினா சொன்னார்.

## பாதுகாப்பு உறுதியாகும் வரை எதிரணி பகிஷ்கரிக்கும்

எதிர்க்கட்சி எம். பிக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை அவர்கள் அனைவரும் நாடாளுமன்றம் செல்லப்போவது இல்லை.

— இப்படி எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று அறிவித்தார்.

சபாநாயகர் முகம்மது அடுத்த வாரம் வெளிநாட்டிலிருந்து திரும்பியவுடன் எதிரணி எம். பிக்களின் பாதுகாப்புக்குறித்து அவருடன் தான் பேச்சு நடத்தப்போவதாகவும் அவர் சொன்னார். [உ-எ]

## ஏறாவூரில் தமிழர்கள் உயிருடன் எரிப்பு!

கொழும்பு, பெப். 22

ஏறாவூரில் தமிழ்ப் பயணிகள் பலர் முஸ்லிம் காடையர் கும்பலினால் நேற்று உயிருடன் எரிக்கப்பட்டதாக அஞ்சப்படுகிறது.

மட்டக்களப்பு நோக்கி தமிழ்ப் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றை முஸ்லிம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வல்லையில் ஹெலி சூடு

யாழ்ப்பாணம், பெப். 22

வல்லைவெளி, தொண்டமனாறு பகுதிகளில் நேற்று மாலை 5 மணியளவில் ஹெலி தாக்குதல் நடத்தியது. [ஓ-15-3]

## வடமராட்சி மக்கள் பீதி

யாழ்ப்பாணம், பெப். 22

வடமராட்சி கடற்பிராந்தியத்தில் நேற்று பீரங்கிப் படகுகளின் ரோந்துச் சேவை அதிகரித்திருந்தது.

அதேசமயம் விமானங்கள், ஹெலிகள் என்பனவும் கடற்பிராந்தியத்திற்கு மேலாக அடிக்கடி பறந்துகொண்டிருந்தன.

இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் பதற் [illegible]

## கிழக்கு மாகாணத்தில் சதாம் கிராமத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.22

கிழக்கு மாகாணத்தில் சதாம் ஹுசேன் கிராமத்தில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் முஸ்லிம் ஊர் காவலர் ஒருவரும், தேசிய காவல் படையைச் சேர்ந்த மற்றொருவரும் உயிரிழந்தனர்.

ஈராக் அரசின் உதவியுடன் நிறுவப்பட்ட சதாம்ஹுசேன் முஸ்லிம் கிராமம் பின்னர் கைவிடப்பட்டிருந்தது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மரணமாவோர் குறித்து கி. சேவையாளரிடம் பதிக!

### செயலகம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்.22

இராணுவ நடவடிக்கைகளினால் மரணமடைபவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை அந்த அந்தக் கிராமசேவையாளர்களிடம் பதிய வேண்டும்.

மேற்கண்ட பணிப்புரை ஒன்றை உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக யாழ். செயலகம் விடுத்துள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

சைக்கிள் திருத்தவேலை தெரிந்தவர் அல்லது பழகுபவர் தேவை. 15 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். வெளி மாவட்டத்தவர்கள் விரும்பத் தக்கது. தொடர்பு: இல: 595, மானிப்பாய்வீதி, ஒட்டுமடம் யாழ்ப்பாணம். [15889]

### புலமைப் பரிசில் பரீட்சை

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான Paper Class சனி, ஞாயிறு 10-30 — 12-00 நடைபெறவுள்ளது. ஆரம்பம்:- 23 - 02 - 91 சனி 10-30 புதிய ஆண்டு 5 இற்கும் புலமைப்பரிசில் வகுப்புகள் Morning Class, Evening Class நடைபெறுகின்றன. ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [15890]

### மணமகன் தேவை

யாழ்ப்பாண, றோமன் கத்தோலிக்க மதப்பெற்றோர் தங்கள் சுமாரான அழகுள்ள 32 வயதுள்ள மகளுக்கு அரச கூட்டுத்தாபனத்தில் நிரந்தர பதவி வகிக்கும் நற்குணமுள்ள மணமகனைத் தேடுகின்றனர். வீடுவளவும், நகையும், ரொக்கமும் சீதனமாக வழங்கப்படும். முழு விவரத்தையும் முதற் கடிதத்தில் எழுதவும். 180, C/O உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [15880]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை எஸ்ரி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [15876]

### நீர் நிலையியல்

க. பொ. த உயர்தர மாணவர்களுக்கு வரப்பிரசாதம் இந்நூல் கடந்தகாலப் பரீட்சை வினாக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. [ஆக்கியோன் P. வேலாயுதபிள்ளை B.Sc, S. பிரேம்நாத் B.Sc.] போட்டோஸ்ரற் பிரதிகளும் உடன் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்; மக்மிலன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். [15886]

### சேவை

நல்ல தரமான, நியாய விலையில் மதிய உணவுப் பார்சல் மற்றும் சிற்றுண்டி வகைகள் இலங்கை கனடியன் அபிவிருத்தி நிதி உதவியுடன் உணவு வழங்கும் சேவைத் திட்டத்தின் கீழ் வழங்குகிறோம். தேவையானவர்கள் முன் அறிவித்தல் கொடுத்து சிற்றுண்டிச் சாலையில் பெற்றுக்கொள்ளலாம். சைவவித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [வி/5774]

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்

பிறப்பு: 05 — 07 — 1908



இறப்பு: 25 — 01 — 1991

### வேலுப்பிள்ளை செல்வத்துரை

[J. P, இளைப்பாறிய முன்னாள் பொலிஸ் சாஜனும், பொறுப்பு அதிகாரியும்]

அன்னாரது 31 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியை எதிர்வரும் 24 - 02 - 1991 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், இவ்வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அன்புப் பாரியார்:
செ. செல்லம்மா.

அராலி - வடக்கு. [15877]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
### அப்பாப்பிள்ளை துஷ்யந்தகுமார்
(கண்ணன்)

மலர்வு: 02 - 04 - 1984
உதிர்வு: 09 - 01 - 1991

குறித்த ஓர் வசந்தத்தில்
குயிலென்றே கூவி நின்ற
குமரனடா கண்ணா!
சித்திரமாய்க் குறும்பு செய்து
சிரித்து நின்ற உன் முகமோ
எம்மை விட்டு நீங்காது ...... நீங்காது!
உனைப் பிரிந்து வாடி நிற்கும்:

அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்காமார்,
அண்ணிமார், அன்ரிமார், மாமன்மார்,
அத்தைமார், சித்தப்பாமார், பேரன்-பேத்திமார்.

82/3, பருத்தித்துறை றோட்,
யாழ்ப்பாணம். [15657]

## கடைகள், பேக்கரிகளில் திடீர் சோதனை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 22

குடாநாட்டில் உள்ள சில கடைகள், பேக்கரிகளில் நிறுவை - அளவைகளில் இடம்பெற்று வரும் மோசடிகளைக் கண்டுபிடிப்பதற்காக திடீர் பரிசோதனைகள் ஆரம்பமாகி உள்ளன.

யாழ். செயலக நிறுவை - அளவைப் பிரிவு பரிசோதர்களே இந்த திடீர் பரிசோதனைகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த சில தினங்களில் நடந்த சோதனைகளின் போது மோசடிகள் பல கண்டுபிடிக்கப்பட்டதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-3]

## 91-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

[காலம் 22 - 2 - 1991]



### 2ஆவது லெப். பொன்னி
### செல்லமாணிக்கம் பிரமிளா, பாமா

மரஜெனனம்: 03 09 1972
வீரமரணம்: 24- -1990

பொலிகண்டி ஊராம் தமிழீழத்திலே
அங்கு உதித்திட்ட முதல்
வீரப்பெண்ணானாய்
பொன்னி நீ ......!
அண்ணன் காட்டிய பாதையைத்
தொடர்ந்தாய் - நீ......!
மாங்குள சிங்கள இராணுவமுகாம் தகர்ப்பிலே
வீரகாவியம் படைத்தாய் நீ ......!
உன் பாதை வழியில் நாமும் செல்வோம்.

இவ்வண்ணம்,
உன் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

பொலிகண்டி சந்தி. V.V.T. [15658]

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 - 10 - 1934
உதிர்வு: 20 - 2 - 1983
திதி: 22 - 2 - 1991



### இளையதம்பி சிவானந்தம்
[ஆசிரியர்]

அமர உலகு சென்று
ஆண்டெட்டு ஆனபோதும்
உங்கள் இனிய அன்பு - எம்மைவிட்டு
உறங்காது என்றும்
ஆத்ம சாந்திக்காக அனுதினமும்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

பங்களாலேன்,
மல்லாகம். [15652]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பாத்தியதை உண்டா?

அரசாங்கம் கடந்த வருடம் ஜூன் மாதத்தில் பிரகடனம் செய்த யுத்தம் தமிழ்ப் பிரதேசங்களில் தொடர்கிறது. அதன் விளைவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இதுவரை நூறு கோடி ரூபா பெறுமதியான அரசாங்க உடைமைகள் சேதமடைந்திருக்கின்றன. இது ஒரு பூர்வாங்க மதிப்பீட்டிலிருந்து கிடைத்த தகவல்.

இந்தக் கணிதப்படி மக்கள் உடைமைகளின் நஷ்டம் அதனைப் போல் ஐந்து மடங்காகவே இருக்கும் என்று மனக்கணக்கால் சொல்லலாம்! யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் 500 கோடியாக இருப்பின் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும்...

தமிழ்க் கிராமங்கள் சம்பூரணமாக நிர்மூலமாக்கப்பட்டிருக்கும் கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும்...? தமிழர்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஆகக் குறைந்தது 5,000 கோடியாக இருக்காதா?

ஒரு நாட்டின் அரசாங்கம் தனது சொந்த உடைமைகளையும், தனது மக்களின் உடைமைகளையும் இராணுவ நடவடிக்கை மூலம் நாசம் செய்து நஷ்டம் விளைவிக்கிறது என்றால்... சம்பந்தப்பட்ட பகுதியையும், அங்கு வாழும் மக்களையும் அது தன்னுடையவை என்று எவ்வாறு கூறமுடியும்? உரிமை கொண்டாட என்ன பாத்தியதை உண்டு?

ஓர் அரசு தனது மக்களையும், அவர்களின் உடைமைகளையும் காப்பாற்றுவது அதன் தலையாய கடமை; பொறுப்பு. அரசாங்கமே பணத்தைக் கோடி கோடியாகச் செலவிட்டு, எத்தனை கோடி கொடுத்தாலும் வாங்க முடியாத மனித உயிர்களையும், கோடிக்கணக்கான பணம் பெறுமதியுள்ள அவர்களின் உடைமைகளையும் அழித்தால் அதன் தர்க்க ரீதியான அர்த்தம் — வேறு நாட்டையும், வேறு மக்களையும் துவம்சம் செய்கிறது என்பதே.

இந்த யதார்த்த நிலைப்பாட்டிலிருந்து அரசு எந்தக் காரணத்தைக் கூறியும் தப்பித்துக் கொள்ள முடியாது.

தமிழர்களின் உரிமைகளை வழங்க மனம் கொள்ளாமல் எவ்வாறு கொழும்பு அரசுகள் அவர்களை ஆயுதம் ஏந்த வைத்த நிலையை உருவாக்கினவோ......

அதே போன்று......

இப்போது தமிழ்ப் பிரதேசங்கள் இலங்கையில் இருந்து வேறுபட்டவை, தனியானவை என்பதையும், தமிழ் மக்கள் வேறானவர்கள் என்பதையும் கொழும்பு அரசாங்கமே தனது செயலால் உருவாக்கி வருகிறது. தமிழர்கள் அதனைத் தடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

# தரிசு நிலங்களிலே சிறுதானிய உற்பத்தி

தென்மராட்சி, பெப். 22

தென்மராட்சிப் பகுதியில் தரிசாக விடப்பட்டுள்ள வயல்கள், விவசாயம் செய்வோருக்கு சிறு தானியப் பயிர்ச்செய்கைக்காக ஒப்படைக்கப்படும்.

சாவகச்சேரி பெரும்போக விவசாய உத்தியோகத்தர் திரு. க. சண்முகநாதன் இதனைத் தெரிவித்தார்.

நெல் அறுவடை ஆரம்பமாகி விட்டதால் வயல்களில் அறுவடை முடிந்ததும் சிறு தானியப் பயிர்களான கௌபி, பயறு, உழுந்து போன்றவற்றை பயிரிடுமாறு அவர் விவசாயிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

அதே சமயம் ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள தரிசு நிலங்களிலும் மரவள்ளி போன்றவற்றை உற்பத்தி செய்ய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்து வருகிறது. புளியங்கூடல், வேலணை ஆகிய இடங்களில் ஏற்கனவே மரவள்ளி உற்பத்தி ஆரம்பமாகி உள்ளது. [இ-117-125]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ் - மாவட்ட அத்தியாவசிய சேவைகளில் உள்ள தடைகள் குறித்து ஆராய்வது சம்பந்தமாக எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற இருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது [ஒ.3]

## பேட்டன் பவல் தினம்

மானிப்பாய், பெப். 22

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க ஆதரவில் பேட்டன் பவல் தினமும், சிந்தனை நாளும் இன்று 22 ஆம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறும். [இ-90]

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 22

சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் யாழ். செஞ்சிலுவைச்சங்க ஆதரவில மண்டைதீவில் நடைபெற்ற கைப்பணிப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம், நாளை 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்க மேல் மாடி மண்டபத்தில் இடம்பெறும். [இ]

## பொம்மரை கண்டவர் மயங்கினார்

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலைப் பகுதியில் பொம்மர்கள் வட்டமிட்டபோது, அதனைக் கண்ட வழிப்போக்கர் ஒருவர் அறிவிழந்து நடு வீதியில் வீழ்ந்தார்.

குண்டுவீச்சில் அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி அருகில் சென்றபோது மயங்கிய நிலையில் இருப்பது தெரியவந்தது. [ஒ 72]

## வெறி கொண்ட குரங்கு அட்டகாசம்

கள் பருகியதால் வெறி கொண்ட வளர்த்த குரங்கு ஒன்று பலரைக் கடித்தது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நுணாவிலில் இடம் பெற்றது.

கச்சாய் வீதியைச் சேர்ந்த செல்லையா மகேந்திரன் [வயது 34] என்பவர் காது, முகம், கை, தொடை ஆகிய இடங்களில் பத்துக்கு மேற்பட்ட கடி காயங்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரைத் தவிர இன்னும் ஆறு பேர் கடிகாயத்துக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். [இ-117]

## சாவகச்சேரி வங்கிக் கிளையில் கொடுப்பனவு

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் ரூபா 4,000 ரூபா 1,000 கொடுப்பனவுகளை முன்பு பெறத் தவறியவர்கள் அதனை மீண்டும் நாளை சனிக்கிழமை பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூபா 4,000 கொடுப்பனவு பெறத் தவறிய 100 பேரும், ரூபா 1,000 கொடுப்பனவு பெறத் தவறிய 90 பேருமே நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு வங்கிக்குச் சமுகம் அளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கொடுப்பனவு காசோலையாகவே வழங்கப்படும் என்று முகாமையாளர் தெரிவித்தார். [இ-89]

## மானிப்பாயில் அடிக்கடி இடம்மாறும் வார்ட்டுகள்

மல்லாகம், பெப். 22

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் உள்ள ஆண் நோயாளர் வார்ட்டுகள் அடிக்கடி இடம் மாறுகின்றன.

ஆரம்பத்தில் மேல்மாடியில் இயங்கி வந்த ஆண் வார்ட்டுகள் பின்னர் கீழ் மாடிக்கு மாற்றப்பட்டன.

ஆனால் தற்போது மீண்டும் மேல்மாடிக்கு மாற்றப்பட்டுள்ளன. [இ-86]

## சோவியத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

சோவியத் சமாதானத் திட்டத்தில் உள்ள முக்கிய அம்சம் வருமாறு;

குவைத்தில் இருந்து தமது படைகளை விலக்கிக் கொள்வதாக ஈராக் முதலில் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

இந்த அறிவிப்பு வெளியான அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் படை விலகல் ஆரம்பமாக வேண்டும்.

அதன் பின்னரே யுத்த நிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

இப்படி பி.பி.சியில் வெளிவிவகாரச் செய்தியாளர் அறிவதாக பி.பி.சி வானொலி நேற்று அறிவித்தது.

## சவூதி - குவைத் எல்லையில் கடும் சண்டை மூண்டது

சவூதி அரேபியா - குவைத் எல்லையில் பன்னாட்டுப் படைகளும், ஈராக் படைகளும் நேற்று கடும் சண்டையில் ஈடுபட்டனர்.

ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் ஈராக் படையினரின் பதினைந்து பங்கர்களை பன்னாட்டுப் படையினர் அழித்தனர் என்று அமெரிக்க தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

அப்போது பங்கர்களினுள் இருந்து ஈராக்கிய படையினரில் 500க்கு அதிகமானோர் பன்னாட்டுப் படையினரிடம் சரணடைந்தனர் என்றும் அச்செய்திகள் கூறின.

## கட்டடங்கள் - வாகனங்கள் பெரும் அளவில் அழிப்பு

சவூதி - குவைத் எல்லையின் இன்னொரு ஈராக் காவல் நிலையத்தின்மீது பன்னாட்டுப் படையுடன் சேர்ந்து எகிப்து மற்றும் குவைத் படையினர் நடத்திய தாக்குதலில் ஆறு கட்டடங்கள், எட்டுத் தாங்கிகள், இரண்டு கண்காணிப்பு நிலையங்கள் மற்றும் மூன்று வாகனங்கள் அழிக்கப்பட்டன.

இன்னொரு தரைத் தாக்குதலில் ஈராக்கிய படைகளின் 5 தாங்கிகள் அழிக்கப்பட்டன என்றும் ஏழு ஈராக்கிய வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும் அமெரிக்கச் செய்திகள் தெரிவித்தன.

சோவியத் சமாதானத் திட்டத்துக்கான ஈராக்கின் பதிலைப் பொறுத்து, பன்னாட்டுப் படையினர் ஆரம்பிக்க உள்ள தரைவழித் தாக்குதலுக்கு முன்னோடியாக நேற்றைய தாக்குதல் அமைந்ததாகக் கருதப்படுகிறது.

## சுக்லா உட்பட ஐந்து அமைச்சர்களும் ராஜினாமா

வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லா உட்பட ஐந்து இந்திய மத்திய அமைச்சர்கள் ராஜினாமாச் செய்து விட்டார்கள்.

கடந்த செவ்வாய் இரவு அவர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களை பிரதமர் சந்திரசேகரிடம் சமர்ப்பித்தனர்.

பிரதமர் சந்திரசேகர் அக்கடிதங்களை ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு புதன்கிழமை இரவு அனுப்பி வைத்தார்.

ஐவரின் ராஜினாமாக் கடிதங்களும் ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் எம்.பி பதவிகளை இந்த ஐந்து அமைச்சர்களும் இழந்துவிட்டனர் என்று சபாநாயகர் ரபிராய் தீர்ப்பளித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்த ஐவரும் தொடர்ந்து அமைச்சர்களாக பதவியில் நீடிக்கலாமா? என்ற பிரச்சினை எழுந்தது.

நீடிக்கக்கூடாது என்று இந்திரா காங்கிரஸ் உட்பட பல எதிர்க்கட்சிகள் கூறின.

சந்திரசேகர் அரசுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க ஐந்து அமைச்சர்களும் பதவிவிலக வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் நிபந்தனை விதித்ததாகவும் கூறப்படுகிறது. [இ-எ]

## மத ஸ்தாபனங்களுக்கு தேங்காய் எண்ணெய்

தென்மராட்சிப் பகுதியிலுள்ள சகல மத ஸ்தாபனங்களுக்கும் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் தேங்காய் எண்ணெய் வழங்கவுள்ளது.

ஆலய தர்மகர்த்தா சபையினர் நாளை சனிக்கிழமை காலை பத்து மணிக்கு வர்த்தகர் சங்கத் தலைவருடன் தொடர்புகொண்டு தேங்காய் எண்ணெய் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் தொடரும்

## ஈராக், அமெரிக்கா அறிவிப்பு

லண்டன் பெப். 22
''இறுதி வெற்றி கிட்டும் வரை போராட்டம் தொடரும்''
—இவ்வாறு அமெரிக்காவும் ஈராக்கும் மாறி, மாறி அறிவித்துள்ளன.

நேற்று நாட்டு மக்களுக்கு டெலிவிஷனில் உரை நிகழ்த்திய ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் இறுதி வெற்றி கிட்டும் வரை ஈராக் படைகள் பின்வாங்கா! ''—என்று கூறுரைத்தார்.

ஆனால் வளைகுடாப் பிரச்சினைக்கு சோவியத் யூனியன் சமர்ப்பித்துள்ள சமரச யோசனை குறித்து தமது கருத்து எதனையும் அவர் இந்த உரையில் வெளியிடவில்லை.

சதாமின் இந்த அறிவிப்பு ஏமாற்றம் தருவதாக இருப்பதாக அமெரிக்கா தரப்பு தெரிவித்தது ''குவைத்தை விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும்'' என்றும் அமெரிக்க தரப்பில் அறிவிக்கப்பட்டது.

''சதாமின் நேற்றைய அறிவிப்பு ஈராக் படைகளுக்கு தற்கொலை அழைப்பாகும்'' —என்று அமெரிக்காவின் பாதுகாப்புப் பிரிவான —பென்டகனை— சேர்ந்த அதிகாரி ஒருவர் சொன்னார்.

இதற்கிடையில் சோவியத் யோசனை தொடர்பாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் பதிலுடன் வெளிவுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் நேற்றிரவு மாஸ்கோ போய்ச் சேர்ந்நார். [உ-3]

---

## நாடாளுமன்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லிஸ அணி எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார சபாநாயகரின் ஆசனத்தில் பலவந்தமாகப் போய் அமர்ந்தார். அதனையடுத்தே சண்டை மூண்டது,

சபாநாயகர் கதிரையிலிருந்து வாசுவை அரச தரப்பினர் கீழே நிலத்தில் இழுத்துப்போட்டு தாக்கியபோது எதிரணியினரும் களத்தில் குதித்தனர்.

இருதரப்பினரும் சுமார் இருபது நிமிட நேரம் கைகலப்பில் ஈடுபட்டனர்.

எம்.பிக்கள் பலர் தங்களிடமிருந்த கோப்புகளினால் [Files] மாறி, மாறி தாக்கிக் கொண்டனர்.

சண்டையில் ஈடுபடாத எம்.பிக்கள் பலர் கோஷங்கள் எழுப்பியும், கூக்குரலிட்டும் ரகளையில் கலந்துகொண்டனர்.

சம்பவம் நடந்த சமயம் சபாநாயகர் எம். எச். முகம்மதுவோ அல்லது பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவோ சபைக்கு வந்திருக்கவில்லை. சபாநாயகர் முகம்மது வெளிநாடு போய் விட்டார் என்பது தெரிந்ததே.

இதற்கிடையில்—

வாழ்க்கைச்செலவு உயர்வு, மனித உரிமை மீறல் ஆகியவற்றைக் கண்டிக்கும் நோக்குடன் பதினொரு எதிர்க்கட்சிகள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த கூட்டம், நேற்று மாலை கொழும்பு ஹவ்லக் இடவில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

அதற்கு முன்னரே ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் கலவரம் வெடித்தது.

---

## மரணமா..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நஷ்டஈடு கோரி விண்ணப்பிக்கும்போது கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்த பிரதி ஒன்று கட்டாயம் இணைக்கப்படவேண்டும் என்றும் இந்தப் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலீஸ் திணைக்களம் இங்கு இயங்காத காரணத்தாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய வந்தது. [ஒ-3]


மானிப்பாய்

### கோவில்பற்று வர்த்தக சங்க அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 23-2-91 சனிக்கிழமை மாலை 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சங்க அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்

செ. சின்னராசா,
செயலாளர்:

தாவடி றோட்,
மானிப்பாய்.
[15891]


## வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 22
கட்டுவனில் நேற்று நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான தர்ஷன் [ஆண்டி ஜீவா— பெரிய கடை, திருகோணமலை] வீர மரணமடைந்தார். [உ]

## இன்று ஓய்வூதியம்

யாழ்ப்பணம், பெப்.22
இலங்கை வங்கியின் யாழ். ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் இன்று டிசம்பர் மாதத்திற்கான ஓய்வூதியம் பணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப் 22
ஆனையிறவு, கல்லுண்டாய், செம்மணி உப்புக் கூட்டுத்தாபன வேலைத்திட்டங்களில் பணியாற்றிய தொழில்நுட்பவியலாளர், உற்பத்தி முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் [ஒ]

---

## சதாம் .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அருகில் உள்ள இராணுவ முகாமில் இருந்து அதிகாரிகளின் முன் அனுமதியின்றி இந்தக் கிராமத்துக்குள் நுழைந்த மேற்படி இரு சிப்பாய்களும் புலிகளின் தாக்குதலில்உயிரிழந்ததாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

---

## ஏறாவூரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காடையர் கும்பல் வழிமறித்துத் தாக்கி பயணிகளை உயிருடன் எரித்தது.

முதலில் சாரதியையும் சில பயணிகளையும் வெளியே இழுத்துப் போட்டு வெட்டிய காடையர்கள் பின்னர் அவர்களை பஸ்ஸுக்குள் போட்டு எரித்தனர்.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பயணிகள் உயிருடன் எரிக்கப்பட்டனர் என்பது கொழும்பில் உர்ஜிதப்படுத்தப்பட்டது. மேலும் பத்து, பன்னிரண்டு தமிழர்கள் எரிகாயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர்.

இருபத்தாறு தமிழ்ப் பயணிகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்று கிழக்கு மாகாண எம்.பி. ஒருவரை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. அறிவித்தது.

இதேவேளை—

தமிழ்ப் பயணிகள் பயணம் செய்த மற்றொரு பஸ் காடையர் கும்பலினால் எரிக்கப்பட்டதாகவும், சாரதி சாதுர்யமாக பஸ்ஸை கும்பலினூடே வெட்டிச் செலுத்தி பாதுகாப்பாக பஸ்ஸைக் கொண்டு வந்து சேர்த்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அப்பாவித் தமிழர் பலர் மன்னாரில் பலியாகினர்?

யாழ்ப்பாணம், பெப். 22
மன்னார் பகுதியில் வங்காலை, தள்ளாடி இராணுவத்தினரால் கடந்த ஞாயிறு மாலை கைது செய்யப்பட்ட பலர் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

பேசாலை அகதி முகாம் மற்றும் சிறுத்திவு, தலைமன்னார் கிராமம் ஆகிய இடங்களில் வைத்து தள்ளாடி இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவலரினாலும் கைது செய்யப்பட்டவர்களுக்கு இக்கதி ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

வங்காலை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களை படையினர் நடத்திக் கூட்டிச் சென்றதாகவும்—

வங்காலையிலிருந்து நானாட்டான் பக்கமாக மூன்று மைல் தொலையில் உள்ள ஓரிடத்தில் மிதிவெடிகள் நிறைந்த பகுதியூடாக கைதானவர்களை நடந்து போகும்படி பணித்ததாகவும்—

மிதிவெடிகளில் சிக்கி பலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

பின்னர் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளினாலும், மிதிவெடியில் சிக்கியும் காயமடைந்த அல்லது உயிரிழந்த சுமார் இருபதுக்கும் அதிகமானோரை படையினர் ஒன்றாகப் போட்டு எரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

### பட்ஜட் கூட்டத்தொடர் ஆரம்பம்:

## இந்திய நாடாளுமன்றில் அனேக ஆசனங்கள் காலி

புதுடில்லி, பெப். 22
இந்திய நாடாளுமன்றத்தின் பட்ஜட் கூட்டத் தொடரை ஜனாதிபதி வெங்கட்ராமன் நேற்று ஆரம்பித்து வைத்துஉரை நிகழ்த்தினார்.

ஜனாதிபதியின் உரையை தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் உட்பட 10 எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள் பகிஷ்கரித்தனர்.

அதனால் நாடாளுமன்ற ஆசனங்களில் அரைப்பங்கு வெறுமையாகக் காட்சியளித்தன என்று தெரிவிக்கப்பட்டது

ஜனாதிபதி தனது உரையில் தமிழ்நாடு தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது பற்றி பிரஸ்தாபித்தார்

இலங்கை தமிழ்ப் போராளிகளின் சட்டவிரோதமான நடவடிக்கைகளை தி. மு. க. அரசு கட்டுப்படுத்த தவறிவிட்டது. அதனால் தான் தி. மு. க. அரசு கலைக்கப்பட்டது என்று ஜனாதிபதி வெங்கட்ராமன் சொன்னார். [ஒ-எ]


## பிறந்ததின வாழ்த்து

### செல்வன் பிரணவன் [கபில்]

22 - 02 - 1991

குஞ்சர்கடையைச் சேர்ந்த ஸ்ரீஜெயசிங்கம் ரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரணவன் தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகின்றார். இவரை கனடாவிலிருக்கும் அப்பா, அம்மா, தங்கை ஷாசீர்த்தியா, அம்மம்மாமார், அம்மப்பாமார், அப்பம்மா, பூட்டி, கொழும்பு பெரியப்பா குடும்பம், சுன்னாகம் பெரியப்பா குடும்பம், ஜேர்மனி பெரியப்பா குடும்பம், சுவிஸ் சித்தப்பா, சித்தி, சுவிஸ் மாமாமார், அன்ரிமார் நவக்கிரியில் இருக்கும் உறவினர் குடும்பம், மட்டக்களப்பு தாத்தா குடும்பம், மலேசியா அம்மம்மா குடும்பங்கள், அச்சுவேலியில் உள்ள உறவினர் குடும்பங்கள், கரணவாயிலுள்ள உறவினர் குடும்பங்கள். தெகிவளை மாமி குடும்பம், வேதாரணீஸ்வர வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உள்ளூர் உறவினர்கள், நண்பர்கள், சகல செல்வமும் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்! நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

கோணந்தோட்டம்,
கரணவாய் தெற்கு.
கரவெட்டி.
[15875]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org